**Tamilnadu Science and Technology Centre**
(Department of Higher Education, Government of Tamilnadu)
Gandhi Mandapam Road, Chennai - 600 025.

Office : 044 - 24410025
Direct : 044 - 24918787
Website: www.tnstc.gov.in
E-mail : tnstc.science@gmail.com

**Dr. S. Soundararajaperumal**, M.Sc.,Ph.D.,
Executive Director, I/C.,

**கடித எண்.** 3335/P1/2022 நாள்.28.11.2022

மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்,
மாவட்டம்

அன்புடையீர்!

பொருள்: தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், சென்னை -25 புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருது 2020-21 ஆம் ஆண்டிற்கான மாவட்ட அறிவியல் கண்காட்சி தொடர்பாக

பார்வை: 23.11.2022 தேதியிட்ட கடித எண். 3335/P1/2022

-----

பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு 2020-21 ஆம் ஆண்டிற்கான புத்தாக்க அறிவியல் மானக் விருதுகளுக்காக மாவட்ட அளவிலான கண்காட்சியில் (District Level Exhibition and Project Competition – DLEPC) கலந்துகொள்ள தங்கள் மாவட்டத்திலிருந்து ________ மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ 10,000 விருதுத் தொகை பெற்றுள்ளனர். எனவே இந்த மாணவர்கள் அனைவரும் மாவட்ட அளவிலான கண்காட்சியில் Manak Competition App. மூலம் கண்டிப்பாகப் பதிவு செய்து கலந்துகொள்ள வேண்டும்.

மாவட்ட அளவிலான கண்காட்சிப் போட்டியில் இவ்வாறு பதிவுசெய்தவர்களில் சிறந்த காட்சிப்பொருள் / கருத்துருவைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறைகள் இணைய வழியில் **2022, டிசம்பர் 5-ஆம்** தேதி முதல் பள்ளிக்கல்வித்துறையின் மேலான ஒத்துழைப்புடன் தேசிய புத்தாக்க நிறுனத்தால் (NIF) நடத்தப்பட உள்ளன. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் மாநில அளவிலான கண்காட்சியில் (State Level Exhibition and Project Competition – SLEPC) கலந்து கொள்வார்கள்.

காட்சிப்பொருள்களை இணைய வழியில் மதிப்பீடு செய்து தேர்ந்தெடுக்க முதன்மைக்கல்வி அலுவலர்கள் தத்தம் மாவட்டத்திலிருந்து நடுவர்களை (Juries) நியமனம் செய்ய வேண்டும். இவ்வாறு நியமனம் செய்யப்படுபவர்கள் அறிவியல் முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களாகவோ அல்லது கல்லூரிப் பேராசிரியர்களாகவோ இருக்கவேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுப்பதற்கான நடுவர்களை 50 மாணவர்களுக்கு ஒரு நடுவர் என்ற முறையில் தேர்ந்தெடுத்து அவர்களின் பெயர்களைக் கீழ்க்கண்ட பட்டியல்படி **2022 டிசம்பர் 2--ந்தேதிக்குள்** மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

# Tamilnadu Science and Technology Centre

Continuation Sheet No.

CHENNAI - 600 025.

| வ. எண் | தேர்வரின் பெயர் | பதவி, பணியாற்றும் இடம் | கல்வித் தகுதிகள் | மின்னஞ்சல் முகவரி | செல்பேசி எண் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

காட்சிப் பொருள்களைத் தேர்ந்தெடுக்க நடுவர்களுக்கான வழிகாட்டுதல்கள் தேசிய புத்தாக்க நிறுவனத்தால் அவர்களின் மின்னஞ்சல் மூலம் அவர்களுக்கு வழங்கப்படும்.

நடுவர்களுக்குத் தலா ரூ 1500/- மதிப்பூதியமாக வழங்கப்படும். தேசிய புத்தாக்க நிறுவன வல்லுநர்களுடன் இணைந்து அதிக பட்சமாக ஐம்பது காட்சிப்பொருள்களை நடுவர்கள் ஒவ்வொருவரும் மதிப்பீடு செய்து மதிப்பெண்கள் வழங்க வேண்டும். நடுவர்களுக்கான மதிப்பூதியமும், இதர செலவினங்களுக்காக ரூ 1000மும் தங்களுக்குக் காசோலை மூலமாக அடுத்த அஞ்சலில் அனுப்பப்படும்.

தங்கள் உண்மையுள்ள

த.செள. பெருமாள்
28.11.22

செயல் இயக்குநர் (பொ)

நகல்: ஆணையாளர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை - 600006